**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 244 of 2018**

**Deposition of Witness P. W.1**

| | |
|---|---|
| **Name : முருகன்** | **Father/Husband's Name: ஆறுமுகம்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 08.05.2024**

**Accused absent 317 Cr.p.c PFA.**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது கணக்கன்பட்டியில் குடியிருந்து, டீ கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். நான் முகாம்பிகை கோவிலுக்கு பக்கத்தில் டீ கடை வைத்து நடத்தி வருகிறேன் இந்நிலையில் கடந்த 2017ம் வருடம் 6வது மாதம் ஒரு நாள் இரவு 8 மணி இருக்கும் 60 முதல் 70 வயது மதிக்கத்தக்க ஒரு அம்மா மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ரோட்டில் ஓரமாக நடந்து வந்து கொண்டிருந்தார். அப்போது ஒரு பிக்கப் வண்டி மோதிவிட்டு கொஞ்சம் தூரம் தள்ளி சென்று நின்றது. அதில் சத்தம் கேட்டு நானும் ,அருகே இருந்த வாட்ச்மேன் சகாயம் என்பவரும் அங்கு சென்று பார்த்தோம். அந்த அம்மா சம்பவ இடத்திலேயே இறந்து கிடந்தார். விபத்து ஏற்படுத்திய நபரை பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும்.

2. அவரது பெயர் சுந்தரம் என்றோ, மோகன சுந்தரம் என்றோ கேள்விப்பட்டேன். விபத்தில் அந்த பெண்மணிக்கு கை , கால் மற்றும் உடம்பில் ஒரு பகுதி சைடாக அடிபட்டிருந்தது. வண்டி மேலே ஏறி இறங்கி உள்ளது நாங்கள் போய் பார்த்த போது அந்த அம்மா குப்புற கிடந்தது. இது சம்பந்தமாக ஆயக்குடி போலிசார் சம்பவத்தன்று இரவு வந்து எங்களை விசாரித்து விட்டு சென்றார்கள். அன்று இரவே என்னிடம் புகாரில் கையொப்பம் வாங்கினார்கள். என்னிடம் காட்டபடும் புகார் என்னால் கொடுக்கப்பட்டது தான் அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **புகார் மனு**

**அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் சம்பவம் நடந்த மறுநாள் காலை வந்து எனது டீ கடையில் இருந்த வாட்ச்மேன் மற்றும் ஆண்டவர் என்பவர்களை விசாரித்தார்கள். அதை தொடர்ந்து வரைபடம் வரைந்து அவர்களிடம் சாட்சி கையொப்பம் வாங்கிவிட்டு சென்றார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

3. சம்பவம் நடந்த தேதி எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லபடும் இடத்தில் நான் முறையாக லைசன்ஸ் வாங்கி டீ கடை நடத்தி வருகிறேன். சம்பவம் நடந்த அன்று டீ கடை இருந்ததா என்றால் இருந்தது. காலையில் 3 மணிக்கு கடை திறந்து இரவு 9 மணிக்கு கடையை சாத்துவேன். கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி ஒரு பெண் சென்றதாக நான் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. விபத்து நடந்த விபரம் சத்தம் கேட்ட பின்னர் தான் எனக்கு தெரிந்தது. மேற்படி விபத்து ஏற்படுத்தியதாக கூறப்படும் வாகன வண்டி எண் எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்திய வாகனம் சிறிது துாரம் சென்று நின்றது. சம்பவத்தை பார்த்த பின் போலிசிற்கு போன் மூலம் தகவல் சொன்னேன். போலிஸ் வந்த பின்பு மேற்படி இறந்து விட்ட பெண்ணை எங்கு கொண்டு சென்றார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. மேற்படி விபத்து தொடர்பாக புகார் மனு சம்பவ இடத்திலேயே நான் கொடுத்தேன். எனக்கு எழுத , படிக்க தெரியாது. போலிசார் தான் புகார் மனு எழுதினார்கள். புகார் மனுவில் என்ன எழுதப்பட்டிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

4. என்னிடம் புகாரில் கையொப்பம் வாங்கிய போது இரவு 8.30 மணி இருக்கும். புகார் கொடுத்த போது மேற்படி இறந்தவரின் உடல் அந்த இடத்திலே இருந்தது என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்தியதாக கூறப்படும் ஓட்டுனர் சம்பவ இடத்தில் இருந்தாரா என்றால் இருந்தார். அப்போது ஓட்டுனரை போலிசார் கைது செய்தார்களா என்றால் செய்யவில்லை. நான் நடத்தி வரும் டீ கடை ஆயக்குடி காவல் நிலைய எல்லைக்கு உட்பட்டதாகும். விபத்து ஏற்படுத்திய வாகனம் பற்றி எனக்கு தெரியாது. காவல் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய்யான புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. போலிசார் சம்பவம் நடந்தஅன்று இரவே விசாரித்தார்கள் மறுநாள்

காலையிலும் சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தார்கள். நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். போலிசார் மறுநாளுக்கு பிறகு வேறு எங்கும் விசாரித்தார்களா என்றால் இல்லை. எனக்கு வழக்கு சம்பவத்தை பொறுத்து நேரடியாக எதுவும் தெரியாது என்றும் போலிசார் கேட்டுக்கொண்டதால் பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றும் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

K R KALAIVANAN Digitally signed by K R KALAIVANAN Date: 2024.05.20 10:23:05 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 244 of 2018**

**Deposition of Witness P. W.2**

| | |
|---|---|
| **Name : ஆண்டவன்** | **Father/Husband's Name: கவுண்டப்பன் (எ) சவுண்டப்பன்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 08.05.2024**

**Accused absent 317 Cr.p.c PFA.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கணக்கன்பட்டியில் குடியிருந்து, துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 முருகனை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது இல்லை. கடந்த 2017ம் வருடம் 6வது மாதம் ஒரு நாள் நான் முருகன் டீ கடைக்கு டீ சாப்பிடுவதற்காக காலை சுமார் 9 – 10 மணியளவில் சென்றிருந்தேன். அப்போது முந்தைய நாள் இரவு நடந்த விபத்து தொடர்பாக போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து என்னிடம் கையொப்பம் கேட்டார்கள் நான் கையொப்பம் போட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது கிடையாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**

2. எனக்கு வழக்கு சம்பவத்தை பற்றி நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். டீ கடைக்கு சென்ற நேரம் எனக்கு ஞாபகமில்லை ஆனால் அங்கு தான் இருப்பேன். காலை 7 மணிக்கு டீ கடைக்கு மாலை 5 மணி வரை எப்போதும் அங்கு தான் இருப்பேன் சம்பவம் நடந்த அன்று நான் டீ கடைக்கு செல்லவில்லை என்றால் சரிதான்.

K R KALAIVANAN
Digitally signed by K R KALAIVANAN
Date: 2024.05.20 10:23:12 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி**